**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-2 | Date : 11.06.2024
Case No. : **O.S.56/2019** | Nationality : Indian
Name : செல்வகுமார், (நில அளவையர்) | Religion :
Age : 46
Father's/Husband's Name :
Village :
Taluk :

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாசாஆ 1 புல வரைபடம் என்னால் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. எந்த காலத்தில் தயார் செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் 1996 ம் ஆண்டு காலகட்டத்தில் தயார் செய்யப்பட்டது. நில உடமை மேம்பாட்டு திட்ட காலத்தில் சர்வே எண் 214/28 ஒரே சொத்தாக இருந்தது. நத்தம் நிலவரி திட்டத்தில் 5 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் வசித்த நபர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு முறையாக அளவீடு செய்து உட்பிரிவு செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது என்ன வகைபாடாக இருக்கிறது என்றால் கோவில் இடமாக இருந்து வருகிறது. கோவில் இடத்தை பொறுத்து யாரும் பட்டா கோர இயலாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சாமிநாதனுக்கு கோவில் சொத்திற்கு அருகில் சொத்துள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்214/28 ல் கண்ட சொத்திற்கும் சர்வே எண்கள் 326/36, 326/37, 326/38, 326/39, 326/40 சொத்துக்களுக்கும் தொடர்புள்ளதா

என்றால் இரண்டும் ஒரே சொத்துக்கள்தான். மேற்படி முதன்மை அளவை கல் நான் பார்வையிட்டேனா என்றால் நான் தாவா சொத்திற்கு சென்று பார்வையிடவில்லை. சாசாஆ 1 ஆவணத்தில் எல்லை கற்கள் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கோவில் இடத்தை பொறுத்து யாரும் உரிமை கோர இயலாது என்றால் சரிதான். சர்வே எண் 326/36 சொத்து ஏற்கனவே என்ன வகைபாடாக இருந்தது என்றால் ரயத்து புஞ்சையாக இருந்தது. தற்போதும் அதே வகைப்பாடாகதான் உள்ளது என்றால் சரிதான்.

**2, 3, 4, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சர்வே எண் 326/40 ல் கண்ட சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் பட்டா எண் 18 ல் அருள்மிகு அரசடி பிள்ளையார் கோவில் பெயரில் உள்ளது. அந்த இடத்தில் அரசடி பிள்ளையார் கோவில் உள்ளது என்றால் சரிதான்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.